

மதவாதம், போதை ஒழிப்பு என்ற பொருளில் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ அவர்கள் செல்லும் சமத்துவ நடைபயணத்தின்போது, மதுரை – மேலூர் அருகே, திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் பங்கேற்று நேரில் வாழ்த்துத் தெரிவித்தக் காட்சி.

# கடலூர் கிழக்கு மாவட்ட கழக மகளிர், மகளிர் தொண்டரணி ஆலோசனைக் கூட்டம்!

## அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமை தாங்கி சிறப்புரை!

கடலூர், ஜன.12-

கடலூர் கிழக்கு மாவட்ட கழக மகளிர் அணி, மகளிர் தொண்டரணி மாவட்ட,மாநகர, ஒன்றிய, நகர, பகுதி,பேரூர் நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம், வடலூர் மங்கையர்க்கரசி திருமண மண்டபத்தில், 09-01-2026, வெள்ளிக் கிழமை, காலை 11 மணியளவில் நடைபெற்றது. வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர், கடலூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் எம்.ஆர். கே.பன்னீர்செல்வம் தலைமைதாங்கி சிறப்புரையாற்றினார்.

கழக தேர்தல் பணிக் குழு செயலாளர் இள.புகழேந்தி, கோ.ஐயப்பன் எம்.எல்.ஏ., மேயர் சுந்தரி ராஜா, மாவட்ட கழக துணை செயலாளர் சுதா சம்பத் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் அமுதராணி வரவேற்புரையாற்றினார்.

கழக மகளிரணி செயலாளர் ஹெலன்டேவிட்சன்,மகளிர் தொண்டரணி செயலாளர் நாமக்கல் பா.பரணி,மகளிர் தொண்டரணி இணை செயலாளர்கள் குமரி விஜயகுமார், தமிழரசி ரவிக்குமார், டெல்டா மண்டல மகளிரணி பொறுப்பாளர் ரேகா பிரியதர்ஷினி, மகளிரணி துணை செயலாளர் ஆ.அங்கையர்கன்னி, மகளிர் சமூகவலைதள பொறுப்பாளர் ரத்னா லோகேஸ்வரன் ஆகியோர் சிறப்பு அழைப்பாளராக கலந்துக் கொண்டனர்.

அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் பேசியதாவது;

வெல்லும் தமிழ் பெண்கள் டெல்டா மாநாட்டில் மாநாட்டில், நம்முடைய மாவட்டத்திலிருந்து 15000 பெண்கள் கலந்து கொள்ள வேண்டும். மாநாட்டில் 2026 சட்டமன்ற தேர்தலில் என்னென்ன செய்ய வேண்டும், எவ்வாறு தேர்தல் பணியாற்ற வேண்டும் என அறிவுரை கொடுப்பார்கள்.

2008 ல் மகளிர் மாநாடு கடலூரில் ஊர்வலத்துடன் கூடிய மாபெரும் மகளிர் மாநாடு நடைபெற்றது. மைதானம் முழுவதும் பந்தல் அமைத்து மாபெரும் எழுச்சியுடன் அந்த மாநாட்டை நடத்தினோம்.

தற்போது மகளிருக்கு உரிமைத் திட்டத்தின் கீழ் மாதந்தோறும் ஆயிரம் ரூபாய், தவுப்புதல்வி திட்டம், விலையில்லா மகளிர் பேருந்து விடியல் பயணம் இப்படி மகளிருக்கான பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. குடும்பத்தில் மூன்று நபர்களாவது கழக அரசின் பணப்பயன்களை பெற்று பயனடைந்து வருகின்றனர். மகளிர் அணி அனைவரும் ஒன்று சேர்ந்து

இந்த திட்டங்களை மக்களிடையே எடுத்துக்கூறி வாக்குகளாக மாற்ற வேண்டும்.

வருகின்ற 2030-க்குள் நிறைவேற்றப்பட வேண்டிய திட்டங்கள் குறித்து உங்கள் கனவை கூறுங்கள் திட்டத்தை, முதல்வர் அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

உங்களுக்கு என்ன கனவு என்ற கேட்பார்கள் அதை இந்த 2030-க்குள் நாங்கள் நிறைவேற்றுவோம் என்று முதல்வராக உத்திரவாதம் கொடுத்திருக்கின்றார்.

உங்களுடைய கனவு என்ன, உங்களுக்கு என்ன வேண்டும் உங்கள் தெருவுக்கு என்ன வேண்டும் உங்கள் பகுதிக்கு என்ன வேண்டும், என்று உங்களுடைய கனவை நீங்கள் கேட்க வேண்டும் கனவை குறிப்பிட்டு கொடுக்க வேண்டும் அதனை அறிக்கையாக தயாரித்து அது உங்களுக்கு ஐந்தாண்டு காலத்திலே நிறைவேற்றப்படும்.

எப்படி நாங்கள் ஆட்சிக்கு வந்தால் மகளிர் உரிமைத்தாக கொடுப்போம்,விடியல் பேருந்து பயண திட்டம் உள்ளிட்ட திட்டங்கள் நிறைவேற்றப்படும் என்று முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அறிவித்தார், அதனை நிறைவேற்றியும் தந்துள்ளார். இவ்வாறு பேசினார்.

இந்நிகழ்வில் மாவட்ட மகளிரணி துணை தலைவர் பா.அமுதாராணி, துணை அமைப்பாளர்கள் வெ.மலர்விழி,செ.சங்கீதா,

இரா.கௌரி, ஆ.ஜீவா,சோ.லதா,கல்பனா, மாவட்ட மகளிர் தொண்டரணி துணை தலைவர் பு.ஜெயசுதா, துணை அமைப்பாளர்கள் அ.தரணி, கா.காயத்ரி, த.ராஜகுமாரி, பா. விஜயலட்சுமி, இரா.சாந்தி ராஜன்,

மாவட்ட கழக துணை செயலாளர் சக்திவேல், ஒன்றிய கழக செயலாளர்கள்: அ.முத்துசாமி,வி.சிவக்குமார்,

த.ஜெயபாண்டியன், ஆர்.நாராயணசாமி, தங்க. ஆனந்தன்,கே.ஆர்.ராயர், கே.ஆர்.கோவிந்தராஜ், எஸ்.செந்தில்குமார்,தெ. காசிராஜன்,பி.சுப்பிர மணியன், கே.ஆர்.தனஞ்செயன், ஆர்.விஜயசுந்தரம், கே.மகேஷ் , ஏ.எஸ்.மதியழகன்,ஏ.எம்.மதியழகன்,மு. வெற்றிவேல், வி.ஜி.பி.சபாநாயகம், டி.திருமூர்த்தி, வி.பி.பாலு,பா.திருமா வளவன், பி.சுந்தரபாண்டியன், முத்துபெருமாள், ஆர். கலையரசன், எம்.மனோகரன், த.சங்கர், ஆர்.ராஜேந்திரன், கே.நடராஜன்,

ம.சோழன், வி.கோவிந்தசாமி,

கடலூர் மாநகர செயலாளர்: கே.எஸ்.ராஜா, கடலூர் பகுதி செயலாளர்கள்: ப.நடராஜன், பா. வெங்கடேஷ்,

நகர கழக செயலாளர் த.தமிழ்ச்செல்வன், வடலூர் நகரமன்றத் தலைவர் சு.சிவக்குமார்,

செயற்குழு உறுப்பினர்கள்: வ.ஞானசேகரன், வே.விக்கிரமன், பொதுக்குழு உறுப்பினர் கே.பி. ஆர்.பாலமுருகன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்துக் கொண்டனர். மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் ப. மனோரஞ்சிதம் நன்றியுரையாற்றினார்.



தமிழ்நாட்டில் உள்ள வேளாண் விவசாயிகள் சங்கத்தினர் அனைவரும் ஒன்று திரண்டு வேளாண் மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வத்தை – அவரது "செண்பகம் இல்லத்தில் சந்தித்து சமத்துவ பொங்கல் விழா நடத்தி கழக அரசுக்கு நன்றி தெரிவித்த காட்சிகள்.

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா!

# ஒட்டன்சத்திரத்தில் பொங்கல் விழா பரிசு பொருட்கள்!

## அமைச்சர் அர.சக்கரபாணி வழங்கினார்!



ஒட்டன்சத்திரம்.ஜன.12.

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் நகராட்சிக்குட்பட்ட காந்திநகர் வினோபாநகர் பகுதியில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் விழா மற்றும் பொங்கல் பரிசுப் பொருள்களை உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி வழங்கினார்.

பின்னர் நகராட்சிக்குட்பட்ட 10வது வார்டு கலைஞர் நூற்றாண்டு காய்கறி மார்க்கெட் பகுதியில் நடைபெற்ற சமத்துவ பொங்கல் மற்றும் கோலப் போட்டி விழாவில் கலந்து கொண்டு பேசினார். இந்நிகழ்வில் நகர செயலாளர் வெள்ளைச்சாமி, மாவட்ட அவைத் தலைவர்மோகன், நகர்மன்றத் தலைவர் திருமலைச்சாமி, செயற்குழு உறுப்பினர் கண்ணன், மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் ஆறுமுகம், நகர்மன்ற உறுப்பினர்கள் பழனிச்சாமி,

அம்ஷ நிவேதா, மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி அமைப்பாளர் தினேஷ், நகர இளைஞரணி அமைப்பாளர் சரவணன் உள்ளிட்ட நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர். படம். திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் நகராட்சிக் குட்பட்ட விசுவநாதர் நகரில் துணை முதலமைச்சர் உதயநிதி பிறந்தநாளை முன்னிட்டு பரிசு பொருட்களை அமைச்சர் அர.சக்கரபாணி வழங்கினார்.

## நெடுஞ்சாலைத்துறை சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும்

# கொளத்தூர் ஏரி பூங்கா சேவை - சாலைப் பணி - நடை மேம்பாலப் பணிகள் ஆய்வு!

## அமைச்சர்கள் எ.வ.வேலு – பி.கே.சேகர்பாபு நேரில் மேற்கொண்டு – பணிகளை விரைந்து முடிக்க அறிவுறுத்தினர்!

சென்னை, ஜன.12-

நெடுஞ்சாலைத்துறை சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் கொளத்தூர் ஏரி பூங்கா சேவை சாலையின் பணிகளையும், கொளத்தூர், செந்தில் நகரில் கட்டப்பட்டு வரும் நகரும் படிக்கட்டுகளுடன் கூடிய நடை மேம்பாலத்தின் பணிகளையும் மற்றும் ஜி.என்.டி சாலை, பாடி மேம்பாலம் அருகில் சாலை அகலப்படுத்துதல் ஆகிய பணிகளின் முன்னேற்றம் குறித்து அமைச்சர்கள் எ.வ.வேலு மற்றும் பி.கே.சேகர்பாபு ஆகியோர் நேரில் ஆய்வு மேற்கொண்டு, பணிகளை விரைந்து முடித்து மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர ஒப்பந்ததாரர் மற்றும் பொறியாளர்களை அறிவுறுத்தினர்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி நேற்று (10.01.2026) பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு மற்றும் இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கேசேகர்பாபு ஆகியோர் கொளத்தூர் பெரம்பூர் பேப்பர் மில்ஸ் சாலையிலிருந்து வரும் வாகனங்கள் உள்வட்ட சாலையை அடைவதற்கும், கொளத்தூர் ஏரி பூங்கா செல்வதற்கும் 600 மீட்டர் நீளம் மற்றும் 7.50 மீட்டர் அகலம் கொண்ட சேவை சாலையின் இருபுறமும் 2.00 மீட்டர் அகலத்திற்கு நடைபாதையும், நெடுஞ்சாலைத் துறை சார்பில் ரூ.3.50 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வரும் பணிகளை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, சாலைப் பணிகளை விரைந்து முடித்து மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர ஒப்பந்ததாரர் மற்றும் பொறியாளர்களை அறிவுறுத்தினர்.

அதனைத் தொடர்ந்து நெடுஞ்சாலைத்துறை சார்பில், கொளத்தூர், செந்தில் நகரில் ரூ.15.42 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் நகரும் படிக்கட்டுகளுடன் கூடிய நடை மேம்பாலம் மற்றும் ஜி.என்.டி சாலை, பாடி மேம்பாலம் அருகில் ரூ.155.35 கோடி மதிப்பீட்டில் சாலை மற்றும் மேம்பாலம் அகலப்படுத்துதல் முன்னேற்றப் பணிகளை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்து மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர ஒப்பந்ததாரர் மற்றும் பொறியாளர்களை அறிவுறுத்தினர்.

அதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அண்மையில் திறந்து வைக்கப்பட்ட கொளத்தூர் பெரியார் நகர் முதல்வர் படைப்பகத்தையும் மற்றும் கொளத்தூர் ஜி.கே.எம். காலனியில் அமைந்துள்ள குளக்கரை பூங்காவையும் அமைச்சர்கள் எ.வ.வேலு மற்றும் பி.கே.சேகர்பாபு ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டனர். அதனைத் தொடர்ந்து, அமைச்சர் பெருமக்கள் சென்னை தீவுத்திடலில் அமைக்கப்பட்டு வரும் தற்காலிக பேருந்து நிலையத்தின் பணிகளை ஆய்வு மேற்கொண்டனர்.

இந்த ஆய்வுகளின் போது மேயர் திருமதி.ஆர். பிரியா, சிஎம்டிஏ உறுப்பினர் செயலர்/ முதன்மைச் செயலாளர் கோ.பிரகாஷ், மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், மத்திய வட்டார துணை ஆணையர் எச்.ஆர். கௌஷிக், வடக்கு வட்டார துணை ஆணையர் கட்டா ரவி தேஜா, நெடுஞ்சாலைத்துறை தலைமைப் பொறியாளர்கள் (பெருநகரம்) ஜவகர் முத்துராஜ், (கட்டு மானம் & பராமரிப்பு) சத்தியபிரகாஷ், கண்காணிப்புப் பொறியாளர் சரவணசெல்வன், சிஎம்டிஏ கண்காணிப்புப் பொறியாளர் ராஜன்பாபு, எம்.டி.சி. இணை மேலாண் இயக்குநர் சுந்தர பாண்டியன், பொது மேலாளர் (இயக்கம்) நெடுஞ்செழியன், மண்டலக் குழுத் தலைவர் திருமதி.சரிதா மகேஷ்குமார், மாமன்ற உறுப்பினர் நாகராஜன் மற்றும் அரசு அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

## ஜி.ஆர் திருமலை தலைமையில் - பூந்தமல்லி நகர தி.மு.க. சார்பில்

# பொங்கல் விழாவை முன்னிட்டு கழக நிர்வாகிகளுக்கு பரிசு!

## அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் வழங்கினார்!


திருவள்ளூர் ஜன 12–

தமிழர் திருநாள் தைப் பொங்கலை முன்னிட்டு பூந்தமல்லி நகர திமுக சார்பில் 21 வார்டுகளைச் சேர்ந்த திமுக வட்டச் செயலாளர்கள், வார்டு நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள் மற்றும் நகர மன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட முக்கிய நிர்வாகிகளுக்கு காலண்டர், வேட்டி, சேலை, பேண்ட், சட்டை, கரும்பு ஆகியவை அடங்கிய பொங்கல் பரிசு தொகுப்பு வழங்கும் விழா நடைபெற்றது. நிர்வாகிகளுக்கு பொங்கல் பரிசு வழங்கும் விழாவிற்கு நகர செயலாளர் ஜி.ஆர்.திருமலை ஏற்பாடு செய்து தலைமை தாங்கினார்.

விழாவில் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழகச் செயலாளரும் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர், ஆவடி சா.மு.நாசர், ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாககலந்து கொண்டு அனைவருக்கும் பொங்கல் பரிசு தொகுப்பு வழங்கி பொங்கல் வாழ்த்துகளை தெரிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து பூந்தமல்லி நகரம் 18 ஆவது திமுக சார்பில் நகர்மன்ற தலைவர் காஞ்சனா சுதாகர் ஏற்பாட்டில் சமத்துவ திராவிட பொங்கல் விழா நடைபெற்றது இதில் அமைச்சர் ஆவடி சாமு நாசர் சமத்துவ பொங்கல் தொடங்கி வைத்து நடைபெற்ற கோலம் போட்டி கலை நிகழ்ச்சிகளில் வெற்றி பெற்ற நபர்களுக்கு பரிசு மற்றும் பொதுமக்களுக்கு, மற்றும் தூய்மை பணியாளர்களுக்கு பொங்கல் பரிசு வழங்கினார்

இதில் மாநில ஆதிதிராவிடர் நலக்குழு அணி செயலாளரும் பூந்தமல்லி சட்டமன்ற உறுப்பினருமான ஆ.கிருஷ்ணசாமி, மாநில சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு இணைச் செயலாளர் சி. ஜெரால்டு, மாவட்ட துணைச் செயலாளர் காயத்திரி ஸ்ரீதர், தொகுதி பார்வையாளர் பி.டி.சி.செல்வராஜ், நகர மன்ற துணைத் தலைவர் க.ஸ்ரீதர், நகர நிர்வாகிகள் தாஜுதீன், துரை பாஸ்கர், அப்பர் ஸ்டாலின், டில்லிராணி மலர்மன்னன், அசோக்குமார், ஜெ. சுதாகர், புண்ணியகோட்டி, அன்பழகன், சௌந்தர்ராஜன் விமல் ஆனந்த், ராஷிக், வட்டக் கழக செயலாளர்கள்உமாசங்கர் , எம்.கே.சுகுமாரன், வின்பிரட், இ.பழனி, இன்பசேகரன், ஆருன் ஷரீப், ஆனந்தபாபு, துளசிராமன், நெல்சன் , சரவணன், நந்தகுமார், வினோத், யுவராஜ்பாபு, சத்யா ஜெய்சங்கர் , நகர மன்ற உறுப்பினர்கள் தாமரைக்கண்ணன், நீலாவதி ஐயப்பன், லிரஞ்சனி, பாத்திமா, கவிதா சுரேஷ், செந்தாமரை, ராஜ்குமார், திருமலை, கன்னி மரியாள், தீபா யுவராஜ் மீனாட்சி செந்தில்குமார் மற்றும் அம்மு பாலாஜி மற்றும் வார்டு நிர்வாகிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு மீனவர் நலவாரிய உறுப்பினர் சேர்க்கை சிறப்பு முகாம் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் பெ. கீதா ஜீவன், தமிழ்நாடு மீனவர் நலவாரிய தலைவர் ஜோசப் ஸ்டாலின் தலைமையில் தூத்துக்குடி திரேஸ்புரம், கடற்கரை சாலை மீன்பிடி துறைமுகம், பாத்திமா நகர் ஆகிய பகுதியில் நடைபெற்றது.நிகழ்வில் துணை மேயர் ஜெனிட்டா செல்வராஜ், மாநில மீனவர் அணி துணை செயலாளர் துறை முகம் புளோரன்ஸ், மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் அந்தோணி ஸ்டாலின், மாநகராட்சி வடக்கு மண்டல தலைவர் நிர்மல் ராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.



திருக்கோவிலூர் சட்டமன்ற தொகுதி, திருவெண்ணெய்நல்லூர் பேரூராட்சியில் கலைஞர் விளையாட்டு உபகரணங்களை கழக துணை பொதுச்செயலாளர் – முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ. விளையாட்டு வீரர்களுக்கு வழங்கினார். உடன் விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி, ஒன்றிய செயலாளர்கள் பி.வி.ஆர்.சு.விசுவநாதன், கை.ரா.சடகோபன், நகர செயலாளர் பூக்கடை கணேசன், பேரூராட்சி தலைவர் அஞ்சுகம் கணேசன், ஒன்றிய குழு தலைவர் ஓம்சிவசக்திவேல், மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.